1979 ஏப்ரல் 25]

சேரன் போக்குவரத்துக் கழகத் தொழிலாளர் சேமநல நிதி.

* வினா எண் 817— திரு. கு. ரமணி: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை சேரன் போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுக்கு சேமநல நிதி ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளதா?

(ஆ) அந்த நிதியிலிருந்து தொழிலாளர், அதிகாரிகள் குழந்தைகளுக்கு கல்வி கற்க உதவியளிக்கப்படுகிறதா?

(இ) ஆம் எனில், 1977-ம் வருடத்தில் எவ்வளவு தொழிலாளர்களுக்கு, எவ்வளவு அதிகாரிகளுக்கு நிதி உதவி கொடுக்கப்பட்டது? தொகை விவரம் என்ன?

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவை செயலர்):

(அ) ஆம்.

(ஆ) ஆம்.

(இ)—

		ரூ. பை.
(1)	தொழிலாளர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோர்களுக்கு அளிக்கப்பட்ட உதவித் தொகை.	28,347.59
(2)	அதிகாரிகள் மற்றும் அவர்களைச் சார்ந்தோர்களுக்கு அளிக்கப்பட்ட உதவித் தொகை.	10,000.00
	மொத்தம் ..	38,347.59

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, தொழிலாளர்களுக்கு அவர்களுடைய குழந்தைகள் படிப்பதற்கு உதவி செய்வதற்காக உள்ள ஒரு திட்டத்தில் அதிகாரிகள் என்பவர்கள் இந்தக் கூட்டத்தில் எப்படிச் சேர்க்கப்படுகிறார்கள். எப்படிப்பட்ட அதிகாரிகளுக்குக் கொடுக்கப்படுகிறது. என்ஜினீயர்கள், மானேஜர்கள், உதவி மானேஜர்கள் போன்றவர்கள் எல்லாம் இந்த உதவித் தொகையை பெரும்படியாக இந்தத் திட்டத்திலே சேர்க்கப்படுகிறார்களா? அப்படிச் சேர்க்கப்படுகிறார்கள் என்றால் அது நியாயமா? இது தொழிலாளர்களுக்காக உண்டாக்கிய திட்டம் மட்டும் என்று சொல்வது சரியாக இருக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவை செயலர்): தலைவர் அவர்களே, முந்தைய அரசு இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தது. இது 1975 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்டது. இந்தத் திட்டம் முறையற்றது. சரியற்றது என்பதால்

இந்த அரசு அதை நீக்கியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். போக்குவரத்துக் கழகத்தினுடைய மேலாண்மை இயக்குநருக்கு அந்த உத்தரவைத் திரும்பப் பெற இந்த அரசு உத்தரவிட்டிருக்கிறது.

திரு. கு. ரமணி: தலைவரவர்களே, ஏற்கெனவே இப்படி ஒரு தப்பான அடிப்படையில் நடவடிக்கை நடத்துவதற்கு அரசு உத்தரவுதான காரணமா அல்லது இந்த உதவி நிதிகள் கல்விக்குக் கொடுக்கக்கூடிய உதவி என்ற வகையில் இப்படி நிதி ஒதுக்கீட்டை அங்கே இருக்கிற நிர்வாகிகள் பார்த்து செய்தார்களா, அப்படிச் செய்திருந்தால் அந்த நிர்வாகிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமா?

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவை செயலர்): தலைவர் அவர்களே, 1977 ஆம் ஆண்டுக்கு முன்னால் இருந்த அரசினுடைய விருப்பத்திற்கிணங்க அந்த உத்தரவு இடப்பட்டு இருக்கிறது. அதைத் திரும்பப் பெற வேண்டுமென்று அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு ஆணையிட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. யா. சை. மு. யூசப்: தலைவரவர்களே, விபத்துக்களினால் மாளுகின்ற காவல்துறை அதிகாரிகளுக்கு 10,000 ரூபாய் வழங்குவதைப்போல அவர்களுடைய தவறு இல்லாமல் விபத்துக்களில் மாறுகின்ற போக்குவரத்துத்துறை ஊழியர்களுக்கும் 10,000 ரூபாய் தர அரசு முன்வருமா?

திரு. ப. கோ. கிட்டு: (அமைச்சரின் பேரவை செயலர்): தலைவர் அவர்களே, ஏற்கெனவே அவர்களுக்கு—இறக்கின்றவர்களுக்கு நஷ்டயீடு கொடுக்க அரசு வழிவகை செய்திருக்கிறது.

லாரி, பேருந்துகளின் விளக்குகள்.

*வினா எண் 818—திரு. யா. சை. மு. யூசப்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

லாரி மற்றும் பஸ்களில் ஒளி குறைக்கும் Auto dipper-ஐ கண்டிப்பாக பொருத்த வேண்டுமென அரசு உத்திரவிட்டுள்ளதா?

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவை செயலர்): அரசின் பரிசீலனையிலுள்ளது.